**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 , திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திரு.S.கோவேந்தன், B.A., LL.B., (Hons).,**

நீதித்துறை நடுவர் எண்.2,

திருப்பத்தூர்.

2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 01–ஆம் நாள் புதன்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.56/2022</u>**

**CNR.NO. TNTU02-002472-2022**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
கந்திலி காவல் நிலையம்,
திருப்பத்தூர் ...... புகார்தாரர்
குற்ற எண்.805/2020

// எதிரிடை//

மாணிக்கம், த/பெ.குள்ளக்கத்திரி

.... குற்றம் சாட்டப்பட்டவர்

(குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கறிஞர் மூலம் வழக்கை எதிர்கொண்டார்)

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சி.சி.எண்.56/2022 |
| 2 | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | கந்திலி காவல் நிலையம்,<br>குற்ற எண்.805/2026 |
| | குற்றம் சாட்டப்பட்டவரின் விவரம் | |
| 3 | பெயர் | மாணிக்கம், த/பெ.குள்ளக்கத்திரி |
| 4 | முகவரி | மண்டலநாயனகுண்டா கிராமம்,<br>திருப்பத்தூர் |
| 5 | வயது | – |
| | நாள் | |
| 6 | குற்ற நிகழ்வு | 27.07.2020 |
| 7 | புகார் | 27.07.2020 |
| 8 | கைது செய்யப்பட்ட நாள் | 29.07.2020 |
| 9 | எதிரி பிணையில் வந்த நாள் | 29.07.2020 |



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

<table>
<tr><td>10</td><td>வழக்கு துவங்கிய நாள்</td><td colspan="3">26.08.2022</td></tr>
<tr><td>11</td><td>விசாரணை முடிக்கப்பட்ட நாள்</td><td colspan="3">23.06.2026</td></tr>
<tr><td>12</td><td>தீர்ப்பு</td><td colspan="3">01.07.2026</td></tr>
<tr><td>13</td><td>தாமதத்திற்குரிய காரணம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td colspan="5">வழக்கின் நிலை</td></tr>
<tr><td>14</td><td>பிணைக்காலம்</td><td colspan="3">–</td></tr>
<tr><td>15</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள்</td><td colspan="3">29.08.2020</td></tr>
<tr><td>16</td><td>பிரிவு 240 கு.ந.மு.வி. (முதல் கேள்வி)</td><td colspan="3">15.06.2022</td></tr>
<tr><td>17</td><td>பல்வகை மனுவின் மீது இந்நீதிமன்றத்தின் உத்திரவு</td><td colspan="3">–</td></tr>
<tr><td rowspan="8">18</td><td rowspan="8">முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை</td><td>அரசு தரப்பு சாட்சி</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா. 1</td><td>26.08.2022</td><td>01.06.2026</td></tr>
<tr><td>அ.சா. 2</td><td>18.10.2022</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 3</td><td>18.10.2022</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 4</td><td>12.03.2024</td><td>12.03.2024</td></tr>
<tr><td>அ.சா. 5</td><td>26.03.2024</td><td>–</td></tr>
<tr><td>அ.சா. 6</td><td>11.09.2025</td><td>11.09.2025</td></tr>
<tr><td>அ.சா. 7</td><td>08.05.2026</td><td>–</td></tr>
<tr><td>19</td><td>Cr.P.C.பிரிவு.313(1)(b)–ன் கீழ் வினாவல்</td><td colspan="3">01.06.2026</td></tr>
<tr><td>20</td><td>தலைமறைவு எதிரிகளின் விவரங்கள் / அவரது ஆஜர்/ஒப்படைப்பு</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

| | | |
|---|---|---|
| 21 | மேலமை நீதிமன்றங்களால் பிறப்பிக்கபட்ட நிறுத்திவைப்பு உத்தரவு ஏதேனும் | இல்லை |

இவ்வழக்கு கடந்த 25.03.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும், எதிரிகளுக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.அறிவுச்சுடர் M.A., B.L., அவர்களும், ஆஜராகியிருக்க, ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலினை செய்ததின் பேரில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

**(1)** இவ்வழக்கில் கடந்த 27.07.2020–ம் தேதி 12.00 மணிக்கு கந்திலி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மண்டலநாயனகுண்டா மதுரா பத்ரிகானூர் கிராமத்தில், வசித்து வரும் சுமதி என்பவருக்கும், மண்டலநாயனகுண்டா பகுதியில் வசித்து வரும் ராஜா என்பவருக்கும், மண்டலநாயனகுண்டா புன்செய் கிராம சர்வே எண்.195/1A, 2A நிலம் சம்மந்தமாக அடிக்கடி தகராறு ஏற்பட்டதன் காரணமாக வட்டாட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கந்திலி குறுவட்ட நில அளவையர் அவர்களால், மேற்படி சர்வே எண் கொண்ட நிலம் அளக்கப்பட்டு அந்த நிலத்தில் கற்கள் நட்டபோது, எதிரி மாணிக்கம் புகார்தாரர் மணிகண்டனையும், நில அளவையரையும் அசிங்கமாகத் திட்டி, அதே நிலத்தை அளந்து கல்லை நடக்கூடாது என அரசாங்க வேலையை செய்யவிடாமல் தடுத்துள்ளதாலும், புகார்தாரரும், நில அளவையரும்



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

அளந்து நட்ட அளவு கற்களை பிடுங்கி போட்டதாலும், எதிரி மீது இ.த.ச.பிரிவு.294(b), 353, 434-ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2)** இறுதி அறிக்கையை இந்நீதிமன்றம் கோப்புக்கு எடுத்துக்கொண்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி ஆஜரானவுடன் நகல்கள் வழங்கப்பட்டு, குற்றச்சாட்டு வனையப்பட்டு எதிரியிடம் வினவியபோது எதிரி அதை மறுத்ததால், அரசு தரப்பில் சாட்சிகளை முன்னிலைப்படுத்த இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டது.

**(3)** அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4** வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு ஆதாரங்களாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**(4)** அரசு தரப்பு சாட்சியங்கள் முடிவுற்ற பிறகு, சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிராக உள்ள சாட்சியங்கள் குறித்து Cr.P.C.பிரிவு.313(1)(b)-ன் கீழ் வினவியபோது எதிரி "பொய் சாட்சியம்" என்றும், அவர் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>**

**(5)** அ.சா.1 மணிகண்டன் கடந்த 27.07.2020 அன்று கந்திலி காவல் நிலையம் ஆஜராகி அளித்த (அ.சா.ஆ.1) புகாரினைப் பெற்றுக்கொண்ட, அ.சா.7 காவல் ஆய்வாளர் திருமதி.சாந்தி, (அ.சா.ஆ.2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 353, 434-ன் கீழ் இறுதியறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவெனில், அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள்.294(b), 353, 434–ன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டு உள்ளதா? இல்லையா ? என்பதே ஆகும்.</u>**

**<u>(I) அ.சா.1–ன் சாட்சியத்தை பரிசீலிக்கையில்,</u>**

**(6)** இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 திரு.மணிகண்டன் தனது நீதிமன்ற விசாரணையில், தனது சாட்சியத்தில், 27.07.2020 அன்று மண்டலநாயனகுண்டா, பத்ரிகாலூர் கிராமத்தில் தினேஷ்குமார் என்பவர் அவருடைய நிலத்தை அளப்பதற்காக பலமுறை வருவாய் அலுவலரிடம் மனு கொடுத்ததாகவும், அதன்பேரில் நடவடிக்கை இல்லை என கூறி தற்கொலை செய்வதற்காக உயர் மின்கம்பத்தில் காலை 10.00 மணியளவில் ஏறிய தகவல் அறிந்து அந்த இடத்திற்கு சென்றதாகவும், அதற்கு பின்னர் வட்டாட்சியர், துணை காவல் கண்காணிப்பாளர் மற்ற அதிகாரிகள் வந்து அவரிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தி மாலை 3.00 மணியளவில் உயர் பின்கம்பத்திலிருந்து உயிரோடு இறங்கினார் என்றும், உடனடியாக அவர் கோரிக்கை நிறைவேற்றும் விதத்தில் பிரச்சனைக்குரிய இடமான 195/1A, 2A ஆகியவற்றை வட்டாட்சியர் உத்திரவுப்படி நில அளவரை கொண்டு அளவீடு செய்து கல் நட்ட சமயத்தில், இவ்வழக்கின் எதிரி மாணிக்கம் என்பவர் கல்லை நடக்கூடாது எனக்கூறி அதை பிடுங்கி எறிந்ததோடு, தன்னையும் சர்வேயரையும், அசிங்கமாக திட்டி, தாங்கள் மேற்படி அளவீடு செய்த இடத்தில் அளவுகல் நடுவதை தடுத்து, மேற்படி கல்லை நடக்கூடாது என பிடுங்கி எறிந்து பிரச்சனை செய்ததால், தாசில்தார் அவர்களின் உத்திரவுப்படி தான் எதிரி மீது கந்திலி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவரின் மூலம் புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

அ.சா.1 தன்னை எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தியபோது, சம்பவம் நடைபெற்றது பொது இடம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(7)** சம்பவம் நடைபெற்றது பொது இடமாக அல்லாமல், தனிப்பட்ட நபருக்குச் சொந்தமான இடமாக இருப்பதால், எதிரியின் மீதான இ.த.ச.பிரிவு.294(b)–ன் கீழான சாராம்சங்கள் இவ்வழக்கில் உள்ளடக்கப்படவில்லை.

**(ii) இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3, அ.சா.4, மற்றும் அ.சா.6 ஆகியோரின் சாட்சியங்களைப் பரிசீலிக்கையில்,**

**(8)** இவ்வழக்கின் அ.சா.2 திரு.சரவணன், அ.சா.3 கோவிந்தன் மற்றும் அ.சா.4 பால்ராஜ் ஆகியோர் தங்களது முதல் விசாரணையில், வருவாய் அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு வந்து நிலத்தை அளந்தது குறித்து இவ்வழக்கிற்கு ஆதரவாக பகுதியளவு சாட்சியம் அளித்துள்ளபோதிலும், தங்களது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது, தாங்கள் சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதால், இவர்களது சாட்சியமானது அரசு தரப்பு வழக்கிற்குப் பலனளிக்கவில்லை.

**(9)** தனிநபர் சாட்சியான அ.சா.4 திரு.பால்ராஜ் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது, எதிரி மாணிக்கம் சம்பவ தினத்தன்று சர்வேயருக்கும், கிராம நிர்வாக அலுவலருக்கும் நிலத்தை அளந்தபோது சம்பவ தினத்தன்று பிரச்சனை செய்யவில்லை என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(10)** அ.சா.6 திரு.பூபதி தனது முதல் விசாரணையில், தானும், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் 28.07.2020 அன்று சம்பவ இடத்திற்குச் சென்றபோது, மாணிக்கம் வகையறா ஏன் என்னுடைய நிலத்தில் கல்லைப் போட்டீர்கள், இவ்வாறு செய்யக்கூடாது என்று தன்னிடம் ஒருமையில் பேசியதாகவும், இதுகுறித்து அ.சா.1 மணிகண்டன் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**(11)** ஆனால், அரசு தரப்பு வழக்கின்படி சம்பவமானது 27.07.2020 அன்று நடைபெற்றதாக எதிரிக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசு தரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ள தேதியில் சம்பவமானது நடைபெற்றதா என்று நீதிமன்றம் சந்தேகம் அடைகிறது.

**(12)** தனது குறுக்கு விசாரணையில், தான் கற்களை நட்டபிறகு அந்த கற்களை யார் பிடுங்கியது என்று தான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றும், தான் நிலத்தை அளந்து முடிக்கும் வரை எதிரியும், அவரது ஆட்களும் தன்னிடம் எதுவும் பேசவில்லை என்று சாட்சியமளித்துள்ளதால், இவரது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்குப் பலனளிக்கவில்லை.

**<u>(iii) இவ்வழக்கின் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 –ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,</u>**

**(13)** அ.சா.5 சென்னையன் தனது முதல் விசாரணையில், பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான கங்கையன் என்பவரை அரசு தரப்பில் சாட்சியாக விசாரிக்கத்


KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

தவறியுள்ளதாலும், மேற்படி பார்வை மகஜரானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை.

**<u>(iv) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.7–ன் சாட்சியத்தைப் பரிசீலிக்கையில்,</u>**

**(14)** அ.சா.7 காவல் ஆய்வாளர் திருமதி.சாந்தி தனது சாட்சியத்தில், அ.சா.1 திரு.மணிகண்டன் கடந்த 27.07.2020 அன்று அ.சா.1–னிடம் (அ.சா.ஆ.1) புகாரைப் பெற்று, (அ.சா.ஆ.2) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, (அ.சா.ஆ.3) பார்வை மகஜர், (அ.சா.ஆ.4) மாதிரி வரைபடம் தயார் செய்து, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, இவ்வழக்கில் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவு.294(b), 353, 434–ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>பகுப்பாய்வு</u> :**

**(15)** இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள்.294(b), 434 மற்றும் 353–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது.

**<u>(v) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.294(b) குறித்துப் பரிசீலிக்கையில்,</u>**

**(16)** சம்பவமானது தனிப்பட்ட நபருக்குச் சொந்தமான இடத்தில் நடைபெற்றுள்ள காரணத்தினால், இந்த வழக்கில் இ.த.ச.பிரிவு.294(b)–இன் சாராம்சங்கள் உள்ளடக்கப்படாததால், இக்குற்றம் எதிரிக்கு எதிராக நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**<u>(vi) எதிரிக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு.353 மற்றும் 434– குறித்துப் பரிசீலிக்கையில்,</u>**

**(17)** அ.சா.1 தனது சாட்சியத்தில் எல்லைக் கல்லை ஊர்ப்பொதுமக்கள் தங்கள் முன்னிலையில் நட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், சம்பவத்தின்போது நிலத்தை அளவீடு செய்த நில அளவையர் அளவு கற்களை யார் பிடுங்கியது என்று தான் நேரடியாகப் பார்க்கவில்லை என்றும், நிலத்தை அளந்து முடிக்கும்வரை எதிரி தன்னிடம் எதுவும் பேசவில்லை என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், சம்பவத்தைக் கண்ணுற்ற தனிநபர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள அ.சா.2 முதல் அசா.4 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதிலளிக்காததாலும், அரசு தரப்பு வழக்கானது சந்தேகத்திற்குரியதாக உள்ளது. எனவே, அரசு தரப்பு வழக்கில் மேற்படி சந்தேகங்கள் அமைந்திருக்க புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாகக் கருத இயலாது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**<u>இறுதியாக,</u>**

**(18)** இவ்வழக்கில் எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவுகள்.294(b), 353 மற்றும் 434–இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் போதுமான சாட்சியங்களால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால், எதிரியை மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளித்து, பிரிவு.248(1) of Cr.P.C–இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.



KOVENDHAN S
JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**(19)** எதிரி எழுதிக் கொடுத்த பிணையம் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு இரத்து செய்து உத்தவிடப்படுகிறது.

**(20)** இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்துத் தட்டச்சருக்குச் சொல்லச்சொல்ல, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, திருத்தங்களுக்குப் பிறகு 2026–ஆம் வருடம் ஜூலை மாதம் 01–ஆம் நாளான இன்று என்னால் அவையறியப் பகரப்பட்டது.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.II**
**திருப்பத்தூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>** :

| **அரசு தரப்பு சாட்சிகள்** | **சாட்சியின் பெயர்** | **சாட்சியின் வகை** |
|---|---|---|
| **அ.சா.1** | திரு.மணிகண்டன், த/பெ.நாகராஜன் | புகார்தாரர் |
| **அ.சா.2** | திரு.சரவணன், த/பெ.ராஜா | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.3** | திரு.கோவிந்தன், த/பெ.கிருஷ்ணன் | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.4** | திரு.பால்ராஜ், த/பெ.சென்னப்ப நாய்க்கன் | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.5** | திரு.சென்னையன், த/பெ.குன்னியப்பன் | பார்வை மகஜர் சாட்சி |
| **அ.சா.6** | திரு.பூபதி, த/பெ. மணி | கண்ணுற்ற சாட்சி |
| **அ.சா.7** | திருமதி.சாந்தி, த/பெ.ஜான் சின்னத்தம்பி | புலன் விசாரணை அதிகாரி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| சான்றாவண எண். | சான்றாவணத்தின் வகை | சான்றளித்தவர்/ மெய்ப்பித்தவர் |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | புகார் | அ.சா.1 |
| **அ.சா.ஆ.2** | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| **அ.சா.ஆ.3** | பார்வை மகஜர் | அ.சா.7 |
| **அ.சா.ஆ.4** | மாதிரி வரைபடம் | அ.சா.7 |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்கள் – இல்லை.</u>**

**<u>எதிரி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை**

**<u>எதிரி தரப்பு சான்றுப் பொருள்கள் –</u> இல்லை**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**

**<u>பின்குறிப்பு</u>**

1. எந்த சாட்சியும் 3 கேட்புரைக்கு மேல் நிறுத் தி வைக்கப்படவில்லை.
2. நீதிமன்ற விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. வழக்கு முடிவு குறித்து சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே வழக்குச் சொத்துக்கள் பற்றிய உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

**//உண்மை நகல்//**

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: THIRUPATHUR

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**திருப்பத்தூர்.**